Registered as Newspaper at the G. P. O. Under No. G. B. 8935/78

# மனிதன்

மனிதன்
அஞ்சல் பெட்டி
எண் 81
யாழ்ப்பாணம்

விலை சதம் 50

ஆத்மா 8 | இராகம் 1 | ஜனவரி / 1979 | பக்கங்கள் 12

## வானம் பார்த்ததோ வளமார் திருநாடு

தமிழ் ஈழத்தினுள் பிரதேச வேறுபாடுகள் குறிப்பிடக்கூடிய அளவு உள்ளன என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் சுயநலம் கொண்ட ஒரு சில சக்திகள் இவ்வேறுபாடுகளை ஒழிப்பதற்கு எதிராகச் செயல்படுகின்றன. இவ்வேறுபாடுகளைப் பெருப்பிக்க இவற்றை நிலைநிறுத்த முயல்கின்றன. இச்சக்திகள் தமிழ் ஈழத்துக்கு வெளியே தமிழ் ஈழ ஆக்கிரமிப்பாளருள்ளும் தமிழ் ஈழத்தில் இவ்வாக்கிரமிப்பாளரின் அடிவருடிகளுள்ளும் இருந்து பிறக்கின்றன. பிரித்தாளும் கொள்கை ஆக்கிரமிப்பாளர்களின் தாரக மந்திரம் இதை சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் இப்போது கையாளத் தொடங்கியுள்ளனர். மலையகத் தமிழன் வடமாகாணத் தமிழன், கிழக்கு மாகாணத் தமிழன் என வேற்றுமையை வளர்ப்பதாலும் நிலைநிறுத்துவதாலும் தமிழ் மக்களிடையே ஒற்றுமையைக் குலைத்து அவர்களை இலகுவில் அடக்கி ஆள இவ்வாக்கிரமிப்பாளர் முனைகின்றனர். தமிழ் ஈழத்திலுள்ள எட்டப்பர் சிலர் சிற்றரசு பதவிகளுக்காக இக்கைங்கரியத்திற்கு உதவும் ஐந்தாம் படைகளாகச் செயல்படுகின்றனர்.

தென் தமிழ் ஈழத்தில் சூறாவளித் தாக்கத்தினால் எழுந்த அபயக்குரல் ஒலி இன்னும் அடங்கவில்லை ஆனால் அதற்கிடையில் பிரதேச வேறுபாடு என்னும் பிணப்பறையை செவிடுபட அடிக்கச் சிலர் முற்படுவது மன வேதனையைத் தருகிறது. எமது அந்நிய ஆக்கிரமிப்பாளருக்கு இது உள்ளூர மன மகிழ்வை அளிப்பதாக அமைகிறது. ஆனால் நாம் பாரதி சொன்னதை அவர்களுக்கும் அவர்களது அடிவருடிகளுக்கும் நினைவுறுத்த விரும்புகிறோம்.

''ஆயிரம் இங்குண்டு சாதி — எனில்
அந்நியர் புகலென்ன நீதி — ஒரு
தாயின் வயிற்றில் பிறந்தோர் — தம்முள்
சண்டை செய்தாலும் சகோதரரன்றோ''

தென்தமிழ் ஈழத்தைச் சின்னாபின்னப் படுத்தி விட்டு இயற்கை தணிந்து விட்டது. இங்கு வாழும் எம்மக்களின் வாழ்வோ முற்றாக நிர்மூலமாகி விட்டது. பெற்றோரை உற்றார், உடன்பிறந்தாரை, சுற்றம், நண்பர்களை இழந்தோம், குடியிருந்த வீடிழந்தோம். பொருள் போயிற்று. உடுதுணிக்கு உடல் துணி காட்டாறு, கடலலை, கள்வர் வசம் போயிற்று. எம் மானவ சமுதாயம் தம் புத்தகங்கள், குறிப்புக்களையும் கல்விகற்ற கூடங்களையும் இழந்து நிற்கின்றது. எம் சொத்தென்று பூத்திருந்த 20 லட்சம் தென்னை மரங்கள் இன்று இல்லையே. மரமுந்திரிப் பருப்பெடுத்துக் காலமோட்டிய ஆயிரவர் நிர்க்கதியாயினரே பசுமையோச்சிய பரந்தபூமி பாதியமரமும் பட்டமரமுமாய்ப் பகட்டிழந்து காட்சி தருகிறது.

வானம் பார்த்த பூமியானோம். ஆம் உணவுப் பொதிகளுக்காக வானத்து விமானங்களைப் பார்த்திருந்தோம் எங்கள் துன்பங்கள் அதிகரிக்க எம்மவரே காரணமாயினர். எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபமென சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பரந்த அளவில் கொள்ளையிலீடுபட்ட சமுகத்துரோகிகளை சமுதாயம் சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும்.

உதவிகள் வந்தன. உலகம் பூராவுமிருந்து வந்த உதவிகள் அனைத்தும் வழங்கப்படவுமில்லை. வழங்கிய உதவியிலும் எத்தனை பாரபட்சம். அப்பப்பா அவன் கையிலல்லவா? சிறிலங்காவிலிருந்து பாண்கொண்டுவந்து வீதி வீதியாய் வீசிக்கொண்டோடினர். பொழுதுபோக்காகக்காட்சி பார்க்கவந்த கனவான் கூட்டத்தார். ஐயோ, இதனால் எம் சமுதாயத்தில் ஒரு பகுதியினர் இன்று சோம்பேறிகளாக மாறிக் கையேந்துகின்றனர். மட்டுநகர் — கல்முனை வீதிநெடுகே நூற்றுக்கணக்கான சிறுவர், சிறுமியர் ஏன் பெரியோரும் காலை முதல் மாலைவரை வீதியாற்செல்லும் வாகனங்களைக் கையேந்தி இரக்கும் நிலை எம்சமுதாயத்தைப் பழுதாக்கவே உதவும்,

இந்த நிலையில் தமிழ்ஈழத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான தொண்டர்கள் எம் உதவிக்கு விரைந்தனர். அரச உதவிகள் அடையாத கிராமங்களைத் தேடிச்சென்று உணவும் உடையும் அளித்து உறையுளும் அமைத்து உதவி வருகின்றனர், பாரபட்சமற்ற இவ்வுதவிகளால் உளம் மகிழ்ந்தோம் உறவும் மலர்ந்தது. நாம் தமிழர் என்ற சகோதரத்துவத்தில் நம்பிக்கை ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

★ தமிழ் ஈழ சமூக பொருளாதாரச் சிந்தனை இதழ் ★

பங்களாதேஷில்.........

# விராங்கனைகள் விலை கொடுக்கிறார்கள்......

"பங்களாதேஷ் மக்களைப்போல் எவரும் மனித வாழ்விற்கு இவ்வளவு அதிகவிலை கொடுக்கவோ துன்பங்களை அனுபவிக்கவோ நேரிடாது" என்று 1972 ஜனவரியில் விடுதலையின் பின் லண்டனில் நடைபெற்ற சந்திப்பொன்றில் முஜிபுர் கூறினார். போரின் வடுக்களை ஆற்றும் முயற்சியில் பாகிஸ்தானிய பஞ்சாப் போர்வீரர்களால் கற்பழிக்கப்பட்ட பெண்களைச் சுதந்திரப்போரின் வீராங்கனைகளாக முஜிபுர் எடுத்துரைத்தார். எனினும் பாரம்பரிய வங்காளிச் சமுகத்தில் கற்பழிப்புக்காளான பெண்கள் ஒதுக்கியே வைக்கப்பட்டு வருகிறார்கள்.

ஜெசூரை இந்தியத் துருப்புக்கள் மீட்டவுடன் நியூயோர்க் டெய்லி நியூஸில் ஜோசப் பீளட் என்பவர் பாகிஸ்தானிய போர் வீரர்களும், அவர்களின் கூலிகளாய்ப் போரிட்ட ரஸாக்கர்களும் இரவில் வண்டிகளில் சென்று கிராமங்களில் திடீர்த் தாக்குதல் நடாத்திப் பெண்களை எப்படி வளைத்துப் பிடித்தார்களென்பதைப் பற்றி எழுதினார். சிலர் ஸ்தலத்திலேயே கற்பழிக்கப்பட்டார்கள். சிலர் இராணுவ முகாம்கட்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். சில பெண்கள் இந்தியத் துருப்புக்கள் பாகிஸ்தானின் பிடியிலுள்ள இராணுவதளங்களைத் தாக்கும்போது கூட அங்கேயே வைத்திருக்கப்பட்டார்கள். முக்தி பகினி விடுதலை வீரர்களைச் சார்ந்தவர்கள் என்ற சந்தேகத்தினால் அடித்து நொருக்கப்பட்டுக் கண்ணீர்விடும் கிராமத்து மக்கள் கட்டிவைக்கப்பட்டுப் பின் கொல்லப்பட்ட கணவனின் முன் மனைவிமார்கள் கற்பழிக்கப்பட்ட விதத்தைக் கூறினார்கள்.

9 மாத காலப் போரின்போது பத்திரிகையாளர்கள் கிழக்கு வங்காளத்தினுள் அனுமதிக்கப்படாதிருந்தபோது சில நம்பத்தகுந்த அறிக்கைகள் வங்காளத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை வெளிப்படுத்தின; ஆனால் தை மாதத்தில் தொண்டர்கள் இக் கொடுமையின் அளவை மதிப்பிட்டார்கள்.

கிறிஸ்தவசபைகளின் உலக நிறுவனத்தின் ஆசிய நிவாரண செயலாளர் (Asian relief secretary of the world organisation of Churches) வங்காளதேசில் தனது இருவார காலவேலைகளைப்பற்றி விபரிக்க ஜெனிவாவில் பத்திரிகையாளர் மகாநாடொன்றைக் கூட்டினார், 9 மாத காலத்தில் 200,000 இற்கும் மேற்பட்ட வங்காளப் பெண்கள் பாகிஸ்தான் துருப்புகளால் கற்பழிக்கப்பட்டிருப்பதாக வண. கென் ராஜே பியூமா அங்கு அறிவித்தார், சில மதிப்பீடுகள் இத்தொகை 400,000 என அறிவித்தன.

[ Black Star ]

பத்திரிகையின் படப்பிடிப்பாளரான [Benengerad' Arago) பெனன் கெருடி அரகோ பாகிஸ்தானிய ஆட்சியாளர்கள் எப்படிச் சிறிய குக்கிராமங்களை நிர்மூலமாக்கினார்களென்றும் பலாத்காரமான கற்பழிப்புகள் பெருந்தொகையாக இடம்பெற்றனவென்றும் அறிவித்தார், கூலிக்குப் போரிட்ட ரஸாக்கர்கள் பிகாரி முஸ்லீம்கள் அதைவிட மோசமாகத் தீங்கிழைத்தார்கள், விடுதலைப் போராட்டத்தின்போது முக்தி பகினியைச் சேர்ந்தோரும் கூட கற்பழிப்புச் செய்தனர்.

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் Aubery என்பவர் பெற்றோருடன் வாழ்ந்து வந்த விவாகமாகி ஒரு மாதமே ஆன 17 வயதுடைய இந்து மணமகள் கற்பழிக்கப்பட்ட நிகழ்ச்சியை விபரிக்கின்றார்.

ஒருநாள் இரவு 10 மணிக்கு ஒரு டிரக் நிரம்பிய போர் வீரர்கள் வீட்டினுள் அத்துமீறிப் பிரவேசித்தார்கள். இருவர் மணமக்களுக்காக ஒதுக்கப்பட்ட அறையினுள் நுழைந்தார்கள். மிகுதிப்பேர் குடும்பத்துடன் நின்றிருந்தார்கள். அவர்களில் ஒருவர் துப்பாக்கியால் அச்சுறுத்தியபடி நின்றிருந்தார். முதலில் உரத்த குரலில் ஒருவர் உத்தரவிடுவதும் மணமகள் அதை எதிர்ப்பதும் கேட்டது. பின்னர் மணமகள் வீறிட்டழும்வரை அமைதி நிலவியது. அதன் பின்னர் விரைவில் அடங்கிவிட்ட ஒரு சில முனகல்கள் தவிர வேறெதுவும் கேட்கவில்லை.

ஒரு சில நிமிடங்களில் ஒருவன் வெளியே வந்தான். அவனது உடை கலைந்திருந்தது. அவன் தனது சகாவிடம் ஏதோ முணுமுணுத்தான். இன்னொருவன் அறையினுள் அவனது இடத்தை எடுக்கச் சென்றான். இப்படியே தொடர்ந்து அந்த ஆறுபேரும் அந்தக் கிராமத்து அழகியைக் கற்பழித்தார்கள். பின்னர் அறுவரும் விரைவாக அவ்விடத்தை விட்டகன்றார்கள். தந்தை அறையினுள் மகள் கயிற்றுக் கட்டிலில் நினைவிழந்து கிடப்பதையும் அவள் கணவன் தனது வாந்தியின்மேல் முழந்தாளிட்ட நிலையில் தரையில் கவிழ்ந்திருப்பதையும் கண்டார்.

8 வயதுப் பெண்களும் 75 வயதுப் பாட்டிகளும் கூட 9 மாத அடக்கு முறையில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர், பாகிஸ்தானிய போர்வீரர்கள் வங்காளிப் பெண்களைக் கண்ட இடத்தில் பலவந்தப்படுத்தியதுமன்றி நூற்றுக்கணக்கானவர்களை இராணுவ முகாம்களிற்குக் கடத்திச் சென்று தங்கள் இராத்தேவைகட்காகப் பயன்படுத்தினார்கள்.

பெனன்கெருடி அரகோ 13 வயதான காதிகாவின் கதையைக் கூறுகிறார். அவள் பாடசாலைக்கு இன்னும் 4 பெண்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தபோது பாகிஸ்தானிய போர்வீரர்களடங்கிய குழுவொன்று அவர்களைக் கடத்திச்சென்றது அவர்கள் ஐவரும் மொகமட்பூரில் உள்ள இராணுவ விலைமாதர் விடுதியில் போர்முடியும்வரை ஆறு மாதங்களிற்குக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர்: காதிகா ஒரு நாளைக்கு இருவரால் தகாத முறையில் உபயோகிக்கப்பட்டாள், மற்றவர்களோ ஒரு நாளில் 10 பேரினால் உபயோகிக்கப்பட்டார்கள். ★

(தொடர்ச்சி மறு இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் பிரச்சனைகள்

கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு: தொண்டமான் அவர்களுடன் இலங்கைப் பல்கலைக் கழக இந்திய வம்சாவளி பட்டதாரிகளும், பட்டதாரி மாணவர்களும் 09-12-1978 இல் கொழும்பில் நடத்திய கலந்துரையாடலின்போது யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்திய வம்சாவளி பட்டதாரி மாணவர் ஒன்றியம் சமர்ப்பித்த அறிக்கையின் பெரும்பகுதி இங்கு வெளியிடப்படுகின்றது.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் இலங்கையின் சுதந்திரத்துக்கு முன்பும் பின்பும் தேசிய சிறுபான்மை இனம் என்ற வகையில் சமூகத்தின் பல்வேறு துறைகளிலும் ஒதுக்கப்பட்டு வந்துள்ளனர் என்பன மறுக்க முடியாத உண்மையாகும். இத்தகையு சமுதாயத்தின் புதிய தலைமுறைகளான தாம் நமது சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆழமாக சிந்திப்பது இன்றைய அவசர, அவசிய தேவையாகும், இந்திய வம்சாவளியினரை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளை நாம் பின்வருமாறு பாகுபடுத்தி ஆய்வது பொருத்தமுடையதாகும்.

1. பொருளாதாரம்

இலங்கையின் வருமானத்தில் பெரும் பகுதியினை ஈட்டித்தருகின்ற இந்திய வம்சாவளியினரின் பெரும் பகுதியினர் பெருந்தோட்டத் துறையில் கூலிகளாகவும் மிகவும் குறைந்த கூலியைப் பெறுகின்றவர்களாகவும் இருக்கும அதே வேளையில் இத்தொழிலை விட்டு வேறு தொழில்களை நாடும் வாய்ப்புகள் அற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

உதாரணமாக இவர்களின் சராசரி குடும்ப வருமானம் தலா வருமானம் என்பவற்றினை நோக்கும் போது இந்திய வம்சாவளியினர் வருமான ரீதியாக எந்தளவுக்கு பின்தங்கிக் காணப்படுகின்றனர் என்பதனை பின்வரும் அட்டவணை தெளிவாக எடுத்துக் காட்டும்.

அட்டவணை 1

| குடும்ப வருமானம் ரூ | முழு இலங்கை | நகர் புறம் | கிராம புறம் | தோட்டத் துறை |
|---|---|---|---|---|
| | 297 | 475 | 277·1 | 204 |
| தலா வருமானம் ரூ | 50·68 | 75·39 | 46·16 | 39·15 |

(மூலம்; சமூக பொருளாதார அளவை 1969/70)

இம் மக்களின் பெரும்பகுதியினர் தொழில் புரிகின்ற பெருந்தோட்டத்துறையில் இவர்களின் வருமானப் பங்கீடு ஏனைய துறைகளைவிட மிகத்தாழ்ந்த நிலையில் இருப்பதைக் கீழ்க்காணும் அட்டவணை II-ன் மூலம் நாம் அறியலாம்.

அட்டவணை 2

வருமானம் உழைப்போர் சதவீதம்

| மாதம் ஒன்றுக்கு | முழு இலங்கை | நகர் புறம் | கிராமப் புறம் | பெருந் தோட்டத்துறை |
|---|---|---|---|---|
| கீழ் 100 | 48·3 | 19·6 | 44·1 | 89·9 |
| 100-199 | 27·4 | 30·8 | 32·0 | 7·6 |
| 200-399 | 18·9 | 33·1 | 20·0 | 2·1 |
| 400-599 | 3 5 | 9·2 | 2·9 | 0·3 |
| 600-799 | 1·0 | 3·3 | 0 6 | 0·1 |
| 8 0-999 | 0·4 | 1·1 | 0·3 | — |
| 1000 மேல் | 0 5 | 2·1 | 0·1 | — |

வாழ்க்கைச் செலவுகள் துரிதகதியில் அதிகரித்துவரும் இன்றைய சூழ்நிலையில் 90% மான உழைப்பாளிகள் ரூபா 100-க்கும் குறைந்த வருமானத்தைப் பெறுவது மிகவும் விசனத்துக்குரியதும், நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதுமான பிரச்சனையாகும்.

இம் மக்கள் மத்தியில் காணப்படும் வேலையில்லாப் பிரச்சனை இவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் பாதிப்பதாக அமைகிறது. இத்தன்மை அண்மைக்காலத்தில் மிகவும் அதிகரித்து வந்துள்ளது. குறிப்பாகக் காணி மறு சீரமைப்பு செயற்பாட்டுக்குப் பின் தோட்டப் பகுதியில் ஏற்பட்ட சகல வெற்றிடங்களையும் இந்திய வம்சா வழியினரற்ற ஏனைய பயிற்சியற்றவர்களை உத்தியோகத்தர்களாக நியமிப்பதன் மூலம் பயிற்றப்பட்ட இந்திய வம்சாவளியினர் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர்.

இத்துடன் இந்திய வம்சாவளியினர் வகித்து வந்த பதவிகளை பிரஜாவுரிமை அற்றவர்கள் என்றும், வேறு பல ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களைக் காட்டியும், பதவிகளிலிருந் வெளியேற்றி மேற் குறிப்பிட்ட பயிற்சியற்றவர்கள் நியமிக்கப்படுவதன் மூலம் இவர்களின் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தூபமிடப்படுகிறது.

தோட்டப்பகுதிகளில் வாழும் மக்களின் நிலை இவ்வாறிருக்க ஏனைய பகுதிகளில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேறியுள்ள இந்திய வம்சாவளியினர் நிலையற்ற வருமானம் பெறும் கூலிகளாகவே காணப்படுகின்றனர்; இவர்களது வாழ்க்கைத்தரம் மிக பின்தங்கியுள்ளதாகவே உள்ளது.

* இதற்கான சில ஆலோசனைகள்

இப்பிரச்சினை நிவர்த்தி செய்யப்பட அரசாங்கத்தில் பல்வேறு துறைகளில் ஏற்படுகின்ற பாரிய வெற்றிடங்களுக்கு கூடியளவு இந்திய வம்சாவளியினருக்குவாய்ப்பு அளிப்பதற்தற்கான நடவடிக்கைகளை அமைச்சு கவனத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொள்வதோடு, தேசிய பயிற்சி சபையில் (National-Apprenticeship Board) வழங்கப்படும் பயிற்சி நெறிகளிலும் இவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். இத்தகைய தீர்வுகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் குடியுரிமைப் பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டியது அமைச்சின் கடமையாகும்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் குறிப்பிட்ட இடங்களுக்கு இவர்களை குடியேற்றுவதன் மூலம் ஓரளவு தொழில் வசதியைப் பெற்றுக் கொடுக்கலாம். அத்துடன் இப்படி குடியேற்றப்படும் மக்கள் ஸ்திரமான வருமானம் பெறுவதற்கு வேண்டிய கடன் வசதிகள், தொழில் நுட்ப உதவிகள் போன்றனவும் தகுந்த முறையில் திட்டமிடப்பட்டு வழங்கப்படல் வேண்டும்.

அரசியல்:

அரசியல் ரீதியில் 1) அடிப்படை உரிமைகள்
2) சமூகத் தொடர்புகள் (Social Intergration)

ஆகிய இரண்டும் முக்கியத்துவம் பெறுகின்றன. அடிப்படை உரிமைகளை நடைமுறையில் இந்திய வம்சாவளியினரும் அனுபவிக்க வேண்டும். மேலும் இதுவரையில் குடியுரிமையற்றவர்கள் என்ற நொண்டிச் சாட்டின் மூலம் மறுக்கப்பட்டு வந்த பின்வரும் உரிமைகள் இம் மக்களுக்கு இனிமேல் வழங்கப்படல் வேண்டும்,

1. குடியுரிமையற்றவர் நிலவுடமைக்காரர் ஆதல்
2. அரசாங்க உத்தியோகங்கள்
3. அரசால் வழங்கப்படும் கடன், உபகாரப் பண வசதிகள்
4. பல்கலைக் கழகத்தில் விசேட பணம் செலுத்தாது படித்தல்:

புதிய அரசியல் யாப்பின்படி குடியுரிமையற்றவர்கள் என்று கருதப்பட்டு வரும் இந்திய வம்சாவளி மக்களுடைய இந்தப் பிரச்சினை பத்து ஆண்டு காலத்துக்குள் ஒரு நியாயமான முடிவுக்கு கொண்டுவரப்படும் என்று உணர்த்தப்பட்டது. ஆனால் இதுவரை காலமும் இதுபற்றி எந்தவிதமான ஆக்கப் பூர்வமான நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை என்பது மிகவும் வருத்தத்துக்குரிய ஒரு விடயமாகும். இத்தகைய புறக்கணிப்பால் குடியுரிமையற்றவர்கள் எனக் கருதப்படும் மக்கள் தங்கள் அரசியல் ஸ்திரம் அடிப்படையுரிமைகள் என்பவை ஆட்டம் காணும் நிலைமையில் உள்ளனர்: எனவே இந்த விடயம் குறித்து ஒரு திட்டவட்டமான, உறுதியான முடிவைக் கொண்டு வருதல் மிக முக்கியமான அத்தியாவசியமான தேவையாகும். இது விடயத்தில் அமைச்சு உடனடியாக தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை எமது குழு வன்மையாக வலியுறுத்துகின்றது.

சமூகத்தின் மத்தியில் இருவேறுபட்ட தனித்த பொருளாதாரக் கூறுகளாக இயங்கிவந்துள்ள தோட்டத்துறையும், கிராமியத் துறையும் இணைவது பற்றிய பிரச்சினையும் இன்று முக்கியத்துவம் பெறுகின்றது. அரசாங்க நிருவாகத்தின் நேரடிக்கட்டுப்பாட்டுக்குள் தோட்டத்துறையினைக் கொண்டு வருதலும், இதுவரை காலமும் தோட்டத்துறையினர் அனுபவித்த மிகக் குறைந்த பட்சமான கல்வி, சுகாதார வசதிகளை கிராமியத்துறைக்கும் பங்கிடுதல் போன்ற விடயங்களையும் இன்றைய அரசியல் கொள்கைகள் வழிவகுத்து வருகின்றன.

கிராமிய தோட்ட ஒருங்கிணைப்பு என்று நாம் கூறும்போது சிங்களப் பெரும் தேசியவாதம் மேலோங்கி நிற்கும் இன்றைய நிலையில் இந்திய தமிழர்கள் தங்களது தனித்துவத்தைப் பேணுவதுடன் சமமான உரிமைகளுடன் இணைந்து வாழ்தல் சாத்தியமான ஒன்றா? அவ்வாறாயின் அதற்கு எத்தகைய வழிவகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பனவும் ஆய்வுக்குரிய விடயங்களாகும்.

குடிசனத் தொகை:

1) இலங்கையில் குடும்பத்திட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரமும், செயல் திட்டங்களும் பெருமளவில் தோட்டப் பகுதிகளிலேயே வெற்றியடைந்துள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலைமையை நாம் வன்மையாக எதிர்க்க வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் புள்ளிவிபரவியல் அடிப்படையில் நோக்கும்போது தோட்டப்பகுதிகளில் இறப்பு வீதம் பெருமளவில் கூடியும், அதே நேரத்தில் பிறப்பு வீதம் எதிர்மாறாக குறைந்தும் காணப்படுகின்றது. இந்நிலைமை நீடிக்குமானால் எமது சமூக மக்களின் எண்ணிக்கை இன்னும் சில காலங்களின்பின் பெருமளவில் குறைந்துவிடக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளது இதனால் நாம் எமது அரசியல் ஸ்திரத்தன்மையை இழக்க நேரிடும்,

2) மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேறியுள்ள இந்திய வம்சாவளியினர் அநேகமாக குடியுரிமையற்றவர்கள் இதனால் இவர்கள் எந்த ஒரு குழுவையும் சாராமல் அரசியல் உரிமை அற்றவர்களாகவும், தங்களுக்கென ஒரு தனித்துவமற்றவர்களாகவும் இருக்கின்றனர்கள். இவர்களின் நிலைமையை நியாய பூர்வமான முறையில் கவனத்தில் எடுக்கப்பட்டு அவர்களுக்குரிய அரசியல் உரிமைகள் பெற்றுக் கொள்ள அமைச்சு வழிவகுத்தல் வேண்டும்.

இதற்கு நாம் முன்னர் சுட்டிக் காட்டியபடி மாவட்ட ரீதியாக இலங்கை வாழ் இந்தியர் சங்கங்கள் அமைப்பதன் மூலம் அவர்களின் அரசியல் தனித்துவ உரிமைகள் பாதுகாக்கப்பட வழிவகுக்கலாம்.

கல்வி :

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது 82%மான மக்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் என்ற வகையில் இலங்கை சமூக ரீதியான வளர்ச்சியில் உயர்ந்த இடத்தை வகிக்கின்றது, இலவசக் கல்வி போன்றவை வறிய மாணவர்களுக்கு உதவி செய்தாலும் கல்வி ரீதியில் எம்சமூகம் எத்தளவு பின்தள்ளப்பட்டிருக்கின்றது என்பதைப் பின்வரும் அட்டவணை எடுத்துரைக்கும்.

[தொடர்ச்சி 9-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பால் பொங்கட்டும்


— மாலிடன் —

[ தமிழ் ஈழ விடுதலையை அடைவதற்கு நாம் பொருளாதார பலத்தை உடையவர்களாக இருத்த லவசியம். உண்மையான அரசியல் சுதந்திரத்தின் பின்பே பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளலாமெனினும் தற்பொழுது எம்மாலான வகையில் எமது தாயகப் பொருளாதாரத்தை வளர்க்கவேண்டும்; இவ்வகையில் வீட்டுக்கு ஒரு ஆடு வளர்த்தல் அவசியமானதொன்ருகும். ]

இன்று 'ஸ்ரீலங்காவின் வாயுள் சிக்கி தவிக்கும் தமிழ் ஈழ மக்கள் ஆகிய நாம் ஒவ்வோர் தேவைக்கும் ஸ்ரீலங்காவையே எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலைக்குள்ளாக்கப் பட்டுள்ளோம். ஸ்ரீலங்கா நாடு தனது நாட்டு மக்களின் பால் தேவையையே பூர்த்தி செய்ய முடியாது தடுமாறிக் கொண்டிருக்கும்போது எப்படி நமது தேவையையும் அவர்களால் நிவர்த்திக்க முடியும்?

1976-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஸ்ரீ லங்காவில் உள்ள ஒரு சாதாரண பிரஜை சராசரியாக ஒரு நாளில் உட்கொள்ளும் பாலின் அளவு 1·4 அவுன்ஸ் என அறியப் பட்டது. இது மற்றைய நாட்டு மக்கள் சராசரியாக நாளாந்தம் உட்கொள்ளும் 20 அவுன்ஸ் பாலுடன் ஒப்பிடும் போது மிக மிக குறைந்த அளவாகும். ஓர் ஸ்ரீலங்கா பிரஜையே சராசரியாக நாளாந்தம் உட்கொள்ளும் பாலின் அளவு 1·4 அவுன்ஸ் ஆக இருக்கும்போது அவர்களின் ஆளுகைக்குட்பட்டிருக்கும் தமிழ் ஈழ மக்களுக்கு நாளாந்தம் எவ்வளவு பால் கிடைக்குமென நீங்களே கற்பனை செய்து பாருங்கள். ஒரு சாதாரண மனிதன் ஒரு நாளைக்கு ஆகக் குறைந்தது 4 அவுன்ஸ் பாலை ஏனும் உட்கொள்ளவேண்டும் இந்த குறைந்த மட்ட நாளாந்த தேவையையேனும் தமிழ் ஈழத்தில் எவ்வாறு பூர்த்தி செய்யலாம்.

நமது தமிழ் ஈழம் ஒரு வரட்சியான பிரதேசமாகும்: இங்கு நாம் பரம்பலற்ற ஒரு போக மழையை மட்டும் பெறுகிற காரணத்தால் புற்களை வளர்ப்பது சிரமமான காரியமாகும். எனவே எமது பால் தேவையை பூர்த்தி செய்ய கூடுதலாக புற்களில் தங்கி உள்ள மாடுகளை வளர்ப்பதை விட இலை, குழைகளில் தங்கி உள்ள ஆடுகளை வளர்ப்பது இலகுவானதாகும். ஆடுகள் ஒரு கடித்து உண்ணும் விலங்கு வகையினதாகும். (browsers) அதாவது மற்றைய விலங்குகள் உண்ணுத தரம் குறைந்த இலை குழைகளையே தமது உணவாகக் கொள்கின்றன. நமது பிரதேசத்தில் இப்படியான பற்றைகாடுகளே அதிகம் அது மட்டுமல்லாது வரட்சியைத் தாங்கக்கூடிய பல இலை குழைகளைத்தரும் தாவரங்களை நமது பிரதேசங்களில் உற்பத்தி செய்து வருடம் முழுவதும் பேணிக்காக்கவும் முடியும்.



ஆடுகளின் உணவிற்காக உற்பத்தி செய்யக் கூடிய பல தாவரங்கள் நமது தமிழ் ஈழத்தில் உண்டு;

முள்முருங்கு; இவற்றின் குழைகளை ஆடுகள் மிக விரும்பி உண்பதோடு, நல்ல போசாக்குள்ள உணவுமாகும்: இதை நாம் நமது வீடுகளில் உள்ள வேலிகளிலோ அன்றி வெறும் காணிகளிலோ ஒரு மழை காலத்துடன் புதிய முறை மூலம் இலகுவாக உற்பத்திசெய்துவிடலாம். இதற்கு நாம் நீர் இறைக்க வேண்டிய அவசியமும் இல்லை. அடுத்து இது நமது தமிழ் ஈழத்தில் பரவலாக காணப்படும் ஒரு தாவரமாகும். இங்கு நாம் ஓரே ஒரு பிரச்சனையை மட்டும் எதிர்நோக்குகிறோம்: அதாவது இது ஆடி, ஆவணி உடன் தொடங்கும். மழையோடு குழைகளை தர ஆரம்பித்தால் அடுத்த வருடம் பங்குனி சித்திரை வரை தருகிறது. இதை தொடர்ந்து வரும் வெப்பத்தை தாங்க முடியாது இலைகளை உதிர்க்க ஆரம்பிக்கும். எனவே சித்திரை தொடக்கம் ஆடி வரையில் ஆன 4 மாத காலத்திற்கு ஆடுகளிற்கான குழைகளிற்கு தட்டுப்பாடு ஏற்படலாம், இதை ஈடு செய்வதற்கு நாம் சில மாற்று வழிகளை கையாளலாம், எப்படியான வரட்சி கூடிய காலங்களில் இலைகளை உதிர்க்காத தாவரங்களையும் நாம் இவற்றுடன் கலந்து உற்பத்தி செய்யலாம்: உதாரணமாக கிளிசிரீடியா. (சீர்மை கிழுவை) பாற்கிழுவை. ஓதி போன்றனவாகும். இவற்றில் கூடுதலான புரத சத்தும் [15%] காணப்படுகிறது. இவற்றைத் தவிர முசுட்டை, குறிஞ்சா, வாதனு ராணிபோன்றவற்றையும் உண்டாக்கலாம், எமது வளவுகளில் நீர்ப்பாசன வசதி இருக்குமாயின் வரட்சியான காலங்களில் நீர்ப்பாய்ச்சுவதன் மூலம் கூடிய விளைவைப் பெறலாம். இங்கு நாம் ஒவ்வொரு வருட முதல் மழையோடு இவற்றின் கொப்புகளை வெட்டி விடுவதன் மூலம் எமக்கு தேவையான புதிய பதிய தண்டுகளை பெறுவதோடு அவை கூடுதலான குழைகளை தரவும் வழி சமைக்கிறோம். இவற்றோடு நாம் செறிதீன் வகைகளை [Concentrates] கூட்டுவதன் மூலம் கூடுதலான விளைவைப் பெறலாம்,

இதுகாலும் நாம் ஆடுகளிற்கு தேவையான உணவு உற்பத்தியை பற்றி கூறினோம். அடுத்து நமது பிரதேசத்தில் உள்ள ஆடுகளின் இனத்தையும், அவற்றின் தன்மையையும் சற்று கவனிப்போம். நமது தமிழ் ஈழத்தில் நாம் மூன்று வகையான ஆடுகளைக் காணலாம்.

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தனி உடமையும்

## VI. முதலாண்மைச் சமுதாய முறை:

படிப்படியாகப் பிரபுத்துவமுறை ஒழிய, கைத்தொழில், வர்த்தகம், வங்கி, பண்ணை, விவசாயம் என்ற பெரும் சொத்து அடிப்படையில் முதலாண்மைச்சமுதாயமுறை அமையலாயிற்று, இவற்றிற்குச் சொந்தக்காரரான முதலாளிகள் சிலரும் இவற்றில் வேலை செய்பவர்களான தொழிலாளர்கள் பலரும் என்ற அடிப்படையில் சமூகத்தின் பெரும்பகுதி அமையலாயிற்று. பெரிய அடிப்படையில் அமைந்த முதலாளித்துவ நிறுவனங்களுடன் சிறு விவசாயிகளும் சிறு கைத்தொழிலாளரும் போட்டி போட முடியாது. இவற்றைக்கைவிட்டு பெரும் முதலாளிகளின் கீழ் தொளிலாழிகளாக வேண்டி ஏற்பட்டது. சொத்துக்குச் சொந்தக்காரரான முதலாளிமார் எதுவித சொத்துமற்ற (உற்பத்திச். சாதனங்களற்ற) தொழிலாளிகள் என்ற வர்க்க அடிப்படையில் சமுதாயம் அமைந்தது:

இவ்விதம் ஐரோப்பாவில் உருவாகிய பூரண முதலாளித்துவம் ஆசிய ஆபிரிக்க குடியேற்ற நாடுகளில் உருவாகவில்லை: முதலாளித்துவ ஐரோப்பிய நாடுகள் தமது கைத்தொழிலுக்கு வேண்டிய விவசாய அடிப்படையிலான மூலப் பொருட்களை உருவாக்கும் களங்களாகவும். தாம் உற்பத்தி செய்த கைத்தொழிற் பொருட்களை விற்கும் சந்தைகளாகவும் குடியேற்ற நாடுகளைப் பயன்படுத்தின. தமது பொருளாதார முறைக்கு வாய்ப்பளிக்கக்கூடிய முறையிலேயே இவ்விடங்களின் பொருளாதாரத்தை வளர்த்தனர். குடிசைக் கைத்தொழில்கள் நசுக்கப்பட்டன: சிறு கைத்தொழில் முயற்சிகள் தடுக்கப்பட்டன. வளமான நிலங்கள் உணவுப் பயிர்ச் செய்கையிலிருந்து காசுப் பயிர்ச் செய்கைக்கு மாற்றப்பட்டன? இக்குடியேற்ற நாடுகளில் வளர்த்த அரைமானிய அரை முதலாளித்துவ சக்திகளை குடியேற்ற நாட்டாட்சியாளர் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர். பெருந்தோட்ட வர்த்தகப் பயிர்ச்செய்கைக் குடியேற்ற நாட்டாட்சியாளர் நலன் கருதி வளர்க்கப்பட்டது: கிராமிய பொருளாதாரம் கவனிப்பாரற்று விடப்பட்டதுடன் பல வழிகளிலும் நசுக்கப்பட்டது. அரை மானிய அரை முதலாளித்துவ அடிப்படையில் அமைந்த உள்நாட்டு முதலாளித்துவ சக்திகளும் குடியேற்ற நாட்டாட்சியாளரை ஆதரித்தனர்.

தனிப்பட்ட சொத்துரிமையின் அடிப்படையிலான முதலாளித்துவ முறையின் கொடுமுடியாக பிறநாடுகளை அடக்கி ஆளும் ஏகாதிபத்திய முறை அமைந்தது. இவ் ஏகாதிபத்திய முறையே முதலாம், இரண்டாம் உலகப் போர்களுக்குக் காரணமாக அமைந்தது. இங்கிலாந்து தனது ஏகாதிபத்தியக் கொடுக்குகளை ஆசிய ஆபிரிக்க நாடுகளில் மாட்டிய பின்பே தனித்தனி சிறு ராச்சியங்களாகப் பிரிந்திருந்த ஜேர்மன் நிலங்கள் ஜேர்மனி என்ற ஒரு நாடாக ஐக்கியப்பட்டது. எனவே அது குடியேற்ற நாடு பிடிக்கும் போட்டியில் பிந்தி விட்டது அது ஒரு பெரிய நாடாக உருவாகியதும் அங்கு கைத்தொழில் தீவிரமாகவளர்ச்சியடைந்தது: அங்கு உருவாகிய முதலாளித்துவ வர்க்கம் தமது கைத்தொழில்களை மேலும் வளர்க்க மூலப் பொருட்களையும், சந்தையையும் பெறுவதற்கு குடியேற்ற நாடுகளைப்பெற விரும்பியது. ஏற்கனவே இங்கிலாந்து இவற்றைப் பிடித்திருந்தமையால் குடியேற்ற நாடுகளைப் பெற ஜேர்மனிய முதலாளி வர்க்கத்தினரின் அரசு இங்கிலாந்துடன் போரிட வேண்டிய நிலை உருவாகியது. இதுவே இரண்டாம் உலக யுத்தத்திலும் பிரதிபலித்தது. இதில் தனிப்பட்ட முறையில் முதலாளித்துவ பொருளாதார முறையை வளர்த்திருந்த யப்பானும் மேற் குறிப்பிட்ட காரணங்களுக்காகப் பங்கு கொண்டது,

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன் பின்னுக ஏகாதிபத்திய நாடுகள் குடியேற்ற நாடுகளில் தமது அரசியல் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதன் சிரமத்தையும் பொருட் செலவையும் உணரத் தொடங்கின. குடியேற்ற நாடுகளில் ஏற்பட்ட தேசிய இன உணர்ச்சியை அடக்குவதில் உயிர்ச்செலவும் எல்லாவற்றிற்கும் மேலாகப் பெரும் பொருட்செலவும் அவர்களுக்கு ஏற்பட்டது: அவர்கள் வியாபாரிகளாதலால் இந்நிலையை அவர்கள் விரும்பவில்லை. இதனுல் அவர்களுக்கு குடியேற்ற நாடுகளிலிருந்து கூடிய லாபம் சம்பாதிக்கக் கூடியதாக இருக்கவில்லை. இதனுல் இம் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள் தமது நேரடி அரசியல் ஆதிக்கத்தை விடுத்து மறைமுக அரசியல் ஆதிக்கத்தையும் பொருளாதாரஆதிக்கத்தையும்பயன்படுத்தும்யுக்தியைக்கையாளத் தொடங்கின. புதிய குடியேற்றவாத [Neo Colonialism] முறையாக இது அமைந்தது. குடியேற்ற நாடுகள் பலவற்றிலும் குறிப்பிடக்கூடிய அளவு கல்வியறிவு படைத்திருந்த அரைமானிய அரை முதலாளித்துவ சக்திகள்தான் அரசியல்விடுதலைப்போராட்டங்களில் தலைமை அணியில் நின்றன. இவர்கள் பெரும்பாலும் சமுதாயத்தின் மேல்மட்டத்திலிருந்தமையால் ஆங்கிலக் கல்வியறிவு பெற இவர்களுக்கிருந்தவாய்ப்பே இவர்கள் தலைமை இடம் பெறக் காரணமாயிற்று. இச்சக்திகள் பெரும்பாலும் குடியேற்ற நாட்டாட்சியாளரை அரசியல் அரங்கிலிருந்து நீக்கித் தாம் அவ்விடத்தைப் பெற வேண்டும் என்ற நோக்குடையனவாய் இருந்தன, முதலாளித்துவ முறையின் பொருளாதாரச் சுரண்டல் பற்றி இவர்கள் அதிகம் அக்கறை எடுக்கவில்லை. ஏனெனில் இவர்களில் பெரும்பாலர் சுரண்டல் அடிப்படையிலான அரைமானிய அரை முதலாளித்துவ வர்க்கத்தோராய் இருந்தனர். இவர்கள் குடியேற்ற நாட்டாட்சியாளரின் சமூக பொருளாதார முறையை ஆதரிப்போராகவும், பின்பற்றுவோராகவும் இருந்தனர். எனவே குடியேற்ற நாட்டாட்சியாளர் இவர்கள் கையில் ஆட்சியை அளிப்பதன் மூலம் தமது மறைமுக அரசியல் ஆதிக்கத்தையும், பொருளாதார ஆதிக்கத்தையும் தொடர்ந்து நிலைநாட்ட முடியுமென்று உணர்ந்தனர். எனவே சுதந்திரத்துடன் இந்நாடுகளின் உண்மையில் ஆட்சிப்பொறுப்பு கைமாற்றமே ஏற்பட்டது. குடியேற்ற நாட்டு வாதிகளின் பொருளாதாரச் சுரண்டல் தொடர்ந்து நீடித்தது.

சுதந்திரமடைந்து சில காலங்களின் பின் இந்நாடுகளில் தேசிய ஜனநாயக வாதிகள் செல்வாக்குப் பெறத் தொடங்கினர். இவர்கள் வெளிநாட்டவரின் பொருளாதார ஆதிக்கத்தைக் குறைக்க முயன்றனர். வெளிநாட்டு பொருளாதார முயற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சமூக உடமையும் பகுதி II

சிகள் பல தேசியமயமர்க்கப்பட்டன. வெளிநாட்டு படைத் தளங்கள் பொறுப்பேற்கப்பட்டன. ஆனல் இந்நடவடிக்கைகள் பூரணமானதாக அமையவில்லை. தேசிய ஜனநாயக வாதிகளும் (National Democrats) அரைமானிய அரை முதலாளித்துவ சக்திகளைச் சேர்ந்தவர்களாயிருந்தமையால் இவர்கள் அந்நிய முதலாளித்துவ நாடுகளின் தொடர்பை முற்ருக முறித்துக் கொள்ள விரும்பவில்லை. புதிய குடியேற்றவாத நாடுகள் அகில உலக நாணய நிதி (I.M.F.) உலக வங்கிபோன்ற நிறுவனங்களின் மூலமும், மூலதன ஏற்றுமதி மூலமும் [கடன்வசதி] அவற்றுடன் கூடிய நிபந்தனைகள் மூலமும் தொடர்ந்து தமது பொருளாதார ஆதிக்கத்தையும், அரசியல் ஆதிக்கத்தையும் நிலை நிறுத்தி வருகின்றன. சுதந்திரமடைந்த நாடுகளில் முதலாண்மை முறைக்கு வேறுன அரசியல் பொருளாதாரமுறை [சமூக உடமை முறை] உருவாகுவதற்குத் தடையாக புதிய குடியேற்றநாட்டு வாதிகள் செயல்படுகின்றனர். இதில் பெரும் முதலாளித்துவ நாடான ஐக்கிய அமெரிக்கா முதலிடம் வகிக்கிறது. சமூக உடமைச் சமுதாயமேற்படுமிடத்து அது அவர்களது பொருளாதாரச் சுரண்டல் முறைக்கு ஆபத்தாக அமையுமென்பதை இப்புதிய குடியேற்றநாட்டு வாதிகள் உணர்ந்து சமூக உடமை முறை இந்நாடுகளில் தலையெடுப்பதைக் கிள்ளி எறியும் வேலையில் ஈடுபட்டுள்ளன. கடன் உதவி என்ற குறுக்கு வழிகளில் மூலதன ஏற்றுமதியைத் தொடர்ந்து கைக்கொண்டு இந்நாடுகளில் தமது முதலாளித்துவ பொருளாதாரத்துக்குக் கட்டுப்பட்ட முதலாளித்துவ பொருளாதாரத்தை வளர்க்க, நிலை நிறுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## VI. சமூக உடமைச் சமுதாய முறை:

தனி உடமை முறை உலகில் சுரண்டல், ஆக்கிரமிப்பு, வறுமை முதலிய பல தீமைகளுக்கும் காரணமாக அமைந்தது. சொத்துக்குச் சொந்தக்காரரான சமுதாயத்தின் ஒரு சிறு பகுதியினர் ஆடம்பரமாக வாழ பெரும் பகுதியினர் கஷ்டமான சீவியம் நடாத்தவேண்டிய நிலையை உருவாக்கியது. கைத்தொழிற் புரட்சியே இந்நிலையை அதன் உச்சக்கட்டத்துக்குக் கொண்டு வந்தது. தொழிலாள வர்க்கத்தினர் ஒன்று திரண்டு உழைக்கும் மக்களின் ஆதரவுடன் முதலாண்மை முறையை முறியடித்து சமூக உடமை முறையை ஏற்படுத்துவதன் மூலமே இப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என்பதை மார்க்சும், ஏஞ்சல்சும் வலியுறுத்தினர். இதை லெனின் சோவியத் யூனியனில் முதல் செயலில் காட்டினர். இதைத் தொடர்ந்து 2-ம் உலகயுத்தத்துடன் கிழக்கைரோப்பிய நாடுகளிலும் சீன, வடகொரியா முதலிய இடங்களிலும் சமூக உடமை முறை ஏற்படுத்தப்பட்டது. கியூபா, வியட்நாம், மொசாம்பிக் முதலிய இடங்களிலும் சமூக உடமை முறை ஆரம்பிக்கப்பட்டது. சமீபத்தில் ஆபுகானிஸ்தானத்தில் இம்முறை ஏற்படுத்தப்பட்டது. இவ்விதமாக உலக நாடுகளில் சமூக உடமை முறை வளர்ந்துகொண்டே போகிறது. உலகின் $\frac{1}{3}$ பகுதி [ஏறக்குறைய] நிலப்பரப்பில் சமூக உடமை முறை உலக சனத்தொகையில் $\frac{1}{3}$ பங்கிற்கு மேற்பட்டவரை தன்னகத்தே கொண்டதாக விளங்குகிறது. அதே நேரத்தில் தனி உடமை முறை மேலும் மேலும் நிலை தளர சமூக உடமை முறையே புதிய புதிய நாடுகளில் நிலையூன்றி வளர்ந்து கொண்டு வருகிறது.

உலக வரலாற்றின் அனுபவத்தில் தனி உடமை முறையின் தீமையை உணர்ந்து விடுதலை வேண்டுவோர் பலரும் தம் நாடுகளிலுள்ள அரை மானிய; அரை முதலாளித்துவ சமூக பொருளாதார அரசியல் முறையை மாற்றியமைக்க முற்பட்டுள்ளனர். ஏகாதிபத்திய ஒடுக்கல்களுக்கும், இன ஒடுக்கல்களுக்கும் உட்பட்டுள்ள பல்வேறு இனங்களும் சமூக உடமை முறை மூலமே தமது உண்மை விடுதலையை அடையலாமென்று உணர்ந்து செயலாற்றுகின்றன. சுதந்திரமென்பது அரசியல், பொருளாதார சமூக சுதந்திரங்களைக் குறிப்பதாகும். ஒரு நாட்டில் எல்லா மக்களுக்குமிடையில் பெருமளவு பொருளாதார சமத்துவம் இருக்கும்பொழுதுதான் அரசியல் சமூக சுதந்திரம் இருக்க முடியும். தனி உடமை அமைப்பில் ஒரு சிறு வர்க்கத்தினரே [முதலாளித்துவ, அரைமானிய அரை முதலாளித்துவ வர்க்கம்] கூடிய பொருளாதார வசதி உடையவர்களாய் இருக்கிருர்கள். இதனுல் நடைமுறையில் அரசியல் உரிமைகளைப் பூரணமாக அனுபவிப்போர் இவ்வர்க்கத்தினரே. இவர்கள் நேராகவோ, அல்லது தமது கையாட்கள் மூலமோ பொருளாதார பலத்தினுல் தமக்கிருக்கும் சமூக செல்வாக்கைப் பாவித்து ஆட்சி ஸ்தானத்தைக் கைப்பற்றுகின்றனர். இது மேலும் அவர்களது சமூக நிலையை உயர்த்துகிறது. பொருளாதார பலத்தின் மூலம் அரசியல் செல்வாக்கின் மூலமும் இவர்கள் அரசின் கருவிகளாகிய பொலிஸ் நீதிமன்று [திறமை வாய்ந்த நியாயதுரந்தரர்களின் சேவையைப் பெறல்] முதலிய இடங்களில் தமது செல்வாக்கையும், பலத்தையும் பாவித்து பொருளாதார வசதிகுறைந்த மக்களின் உரிமைகளை நசுக்க முடிகிறது. கொலை, மோசடி, களவு, கற்பழிப்பு முதலிய பல அக்கிரமங்களைச் செய்துவிட்டு திறமைவாய்ந்த சட்டத்தரணிகளை அமர்த்தித் தப்பித்துக் கொள்ள முடிகிறது. ஒரு சிலர்தான் அகப்படும் நிலை ஏற்படுகிறது. இதனுல் பாதிக்கப்படும் மக்களுக்கு எதுவித விமோசனமும் கிடைப்பதில்லை. முதலாண்மை அரசியல் முறையில் சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்பது ஒரு அடிப்படைத் தத்துவமாகக் கூறப்படுகிறது. ஆனல் இவ்வமைப்பில் இது வெறும் தத்துவமாகத்தான் இருக்கமுடியுமேயொழிய, நடைமுறையில் இருக்கமுடியாது.

இதுபோன்றே பொருளாதாரச் செல்வாக்கு உடையவர்கள் தமது பொருளாதார அரசியல் செல்வாக்கைப் பாவித்து கைலஞ்சம் கொடுத்தல் பதவி உயர்வு பெற்றுக் கொடுத்தல் அல்லது வசதி குறைந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்விப்பது அல்லது பதவி குறைப்பதாகப் பயமுறுத்தல் முதலியவற்றின் மூலம் தமக்கு வேண்டியவற்றைச் செய்விக்கக் கூடியதாகவுள்ளது. அரசாங்கத்திஞல் வெளிக்கு பொதுநல சேவைக்கு என்று ஒதுக்கப்படும் பணத்தில் பெரும்பகுதி இவர்களது கைக்கே வந்து சேர்கிறது. இவர்களும் இவர்களைச் சேந்தவர்

[தொடர்ச்சி 9-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) உள்நாட்டு இனமான **அரிக்கன் ஆடு:**

இது சிறிய உருவமுடையதும் மிகவும் குறைந்த அளவிலேயே பாலையும் தருகிறது. [நாளொன்றுக்கு 1 போத்தலிலும் குறைவு] ஆனல் இது எமது நாட்டு சுவாத்தியத்திற்கு இசைவாக்கப்பட்ட ஓர் இனமாகும்.

(ii) ஜமுனபாறி (Jamunapari)

இது இன்று பரவலாக யாழ் குடாநாட்டில் காணப்படுகின்ற போதிலும் இது ஓர் இந்திய இனமாகும். அது பருத்த உடலையும், நீண்ட செவியையும் கொண்டதுடன் கூடுதலான பாலையும் தருகிறது ஒருநாளைக்கு சராசரியாக 5lbs [2½ போத்தல்] பால் மூலம் 7மாதம் வரை கறக்கலாம். அதோடு இது வருடா வருடம் குட்டி ஈனும் தன்மையும் கொண்டது, இப்படியான நல்ல இயல்புகள் பல இதில் காணப்பட்ட போதிலும் ஆட்டு சோர்வு வாதம் (Goat - paralysis] என்னும் நோய் இதில் பொதுவாகக் காணப்படுகிறது. ஆனல் இவற்றின் கடாக்களை உபயோகித்து எமது உள்ளூர் இனங்களை சினைப்படுத்தி பெறப்படும் கலப்பு இனங்களில் (Cross breed) இந்நோய் காணப்படாததோடு இவற்றில் சராசரியாக 1½ — 2 போத்தல் பாலை நாளாந்தம் பெறலாம். இது ஒரு சாதாரண குடும்பத்துக்கு போதுமான அளவு பால் ஆகும்.

(iii) சாணன் (Saanen)

இதுவும் தமிழ் ஈழத்தில் இடையிடையே காணப்படுகின்ற போதும், உண்மையில் ஓர் ஐரோப்பிய இனமாகும். இதன் உடல் தூய வெண்ணிறமாகவும், மூக்கு, மடி ஆகியன இளம் சிவப்பு நிறமாகவும் காணப்படும். இது பருமனில் நடுத்தரமான போதும், கூடுதலான பாலை உற்பத்தி செய்கிறது. ஒரு நாளுக்கு 6lbs [3 போத்தல்] 7 மாதங்கள் வரை கறக்கலாம், இவற்றையும் நாம் நமது உள் ஊர் இனங்களுடன் இனம் கலந்து கலப்பினங்களை [Cross breeds] நமது பிரதேசத்தில் வளர்க்கலாம்.

பல ஆராய்ச்சியாளர்களால் நடாத்தப்பட்ட ஆராய்சிகளின் படி ஒரு சாதாரண நாட்டுப் பசுவின் பராமரிப்புச்செலவில் 3—4 ஆடுகளை வளர்க்கமுடியுமென்பதும் இதன் மூலம் பசுவிலும் உயர்ந்த பால் உற்பத்தியை பெறலாம் என்பதும் காட்டப்பட்டுள்ளது. இவை மட்டும் அல்லாது ஆட்டுப் பால், பசுப்பாலை விட பல சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது. நாம் ஆட்டுப்பாலையும் பசுப்பாலையும் ஒப்பிட்டு அவற்றிலுள்ள பதார்த்தங்களைப் பார்த்தோமாயின் ஆட்டுப்பால் பசுப்பாலைவிட பல வழிகளிலும் சிறந்தது என்பது தெளிவாகும்.

| | ஆட்டுப்பால் | பசுப்பால் |
|---|---|---|
| நீர் [Water] | 87% | 87.5% |
| கொழுப்பு [Fat] | 4% | 3.5% |
| புரதம் [Protein] | 3% | < 3% |
| வெல்லம் [Lactose] | 4·5% | 4·5% |
| கனி உப்புகள் (Minnerals) | 1 4% | 1-3% |

(a) ஆட்டுப்பால் பசுப்பாலை விட கூடுதலான கொழுப்பு புரதம், கனிஉப்புகள் போன்றவற்றை கொண்டுள்ளது.

(b) ஆட்டுப்பாலில் காணப்படும் கொழுப்பு புரத பதார்த்தங்கள் மிக நுண்ணிய துணிக்கைகளால் ஆக்கப்பட்டுள்ளதன் காரணமாக இது பசுப்பாலை விட் இலகுவில் சீரணிக்கிறது. உதாரணமாக பசுப்பால் சீரணிக்க 2 மணித்தியாலங்கள் எடுத்தால் அதே அளவு ஆட்டுப்பால் சீரணிக்க ½ மணித்தியாலம் மட்டுமே எடுக்கிறது. இதன் காரணமாக குடற் புண்கள் (Ulcer) உள்ளவர்க்கும், குழந்தைகளுக்கும் இது ஒரு சிறந்த உணவாகக் கருதப்படுகிறது.

(c) இது கூடுதலான தாங்கற் தன்மையைக் [Buffer—action) கொண்டுள்ளது. எனவே எமது உணவுக்கால்வாயில் கூடுதலான அமிலமோ, அன்றிக்காரமோ காணப்படின் அதை நடுநிலை ஆக்குகின்றது.

மேலே நாம் குறிப்பிட்ட கலப்பு இன ஆடுகள் பல நோய்களிற்கு எதிர்ப்புத் தன்மையைக்காட்டுகின்றபோதும் சில நோய்கள் சாதாரணமாகக் காணப்படுகின்றன. அவை யாவன.

அ) மடி சுழற்சி (Mastits) ஆ) செமியாக்குணம் (Impactian]
இ) வயிறு ஊதல் (bloat) ஈ, ஏற்பு (Tetanus)
உ] Internal Parasitie Diseases [ஊ] Contageous Pustular Dvematitis எ. blood parasite — Anaemia

எந்த ஒரு நோயோ, அன்றி நோயின் அறிகுறியோ காணப்படின் உடனடியாக அருகில் உள்ள மிருக வைத்தியரை நாடவும்.

வீட்டிற்கோர் ஆடு வளர்த்திடுவோம்! ★

## விடிவுக்காய் விரைக

— மாதுரி —

மனம்போல ஆளுமொரு குடியாட்சி இங்கே;
மனம்பொருமித் துடிக்கின்ற மக்களது கூட்டம்;
இனவொடுக்கல் முயற்சியிலே ஒவ்வொன்றாய்க் கயிறு
இதுவரைக்கும் எங்களது இனக்குமுறல் கேட்டு
தினம்போடும் வேஷங்கள் தினசரியில் மட்டும்
திசைமாறிப் போயென்று திரையெல்லாம் கிழியும்?

தரப்படுத்தல், ஆட்சிமொழி தமிழனுக்கு வேலி;
தரையெடுக்கும் முயற்சியிலும் படையெடுப்பின் போலி;
அரசாளும் மக்களினம் ஆனவரை சாட;
அடுத்தடுத்து இனவொடுக்கல்; எங்களினம் தேயும்!
வரப்போகும் வாழ்க்கைக்கு விடிவொன்று தேட
வரவேற்பில் முரண்பட்டு தலைமையெலாம் மோதும்;

அடுத்தடுத்து தமிழனுக்கு விழுகுதடா சுருக்கு;
ஆனவரை எதிர்த்தவர்க்குப் போட்டதோ தடுப்பு
கொடுமையினிப் புதிதாக எழுவதற்கு இல்லை
கொந்தளிப்பு எம்நெஞ்சில் குமுறியெழும் வேளை;
விடுபடுவோம்; இல்லையெனில் வீழ்தலே நன்று!
விடிவுக்காய்ப் போராடிப் போயொழிதல் நன்று;

அடிபட்டு மிதிபட்டும் அடுத்தவரை நாடி;
அன்றோடு அடங்கிவிடும் நிலைமாற வேண்டும்!
துடிப்போடு போராடும் தோழரெல்லாம் தடையைத்
தூளாக்கும் செயலொன்றே தேவையினி இங்கே!
வெடித்தெழுவோம்! வேண்டாத கொள்கையினை வைத்து
விட்டதினிப் போதும், விரைவாகச் செய்வோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இலங்கை வாழ் இந்திய ... .....

| கல்வி நிலை | முழு இலங்கை | தோட்டப் புறம் |
|---|---|---|
| 1. பள்ளிக்கூடம் செல்லாதோர் (எழுதப் படிக்கத் தெரியாதோர்) | 28·95 | 44·11 |
| 2. பள்ளிக்கூடம் செல்லாதோர் (எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்) | 3·21 | 77·60 |
| 3. ஆரம்பக்கல்வி | 37·93 | 40·55 |
| 4. இரண்டாந்தரக் கல்வி | 23·89 | 6·15 |
| 5. க. பொ. த. (சாதா) சித்தி | 5·33 | 1·51 |
| 6. க. பொ. த. (உயர்) (சித்தி) | 0·39 | 0·04 |
| 7. பட்டம் பெற்றோர் | 0·14 | 0·00 |
| 8. மற்றவர்கள் | 3·16 | 0·04 |

(மூலம்: மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி அளவை 1973)

மேற் காட்டியுள்ள அட்டவணையின்படி தோட்டப் புறங்களில் 5-ம் வகுப்பிற்கு மேல் கல்வியினை மேற்கொள்பவர்கள் 10% தத்துற்கும் உட்பட்டே காணப்படுகின்றனர். இவ்விகிதத்தினை உயர்த்துவதற்கான வழிவகைகள்;

1) இந்திய வம்சாவளி மாணவர்களின் நலன் கருதி பதுளையில் தொழில்நுட்பக் கல்விநெறிகளின் தமிழ்ப் பிரிவை ஏற்படுத்தல்.

2) இடைநிலைக் கல்வியில் இருந்து வருடந்தோறும் 500 மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்குவதன் மூலம் 1983-ம் ஆண்டளவில் கூடியளவு இந்திய வம்சாவளி மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கான சாத்தியக் கூறை ஏற்படுத்தலாம். ★

தனி உடமையும் .......

பனும் இவர்களது கையாட்களுமே ஆட்சியாளராக இருப்பதால் இதற்கெதிராக உறுதியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதில்லை. மற்றவர்களுக்கு கண்ணில் மண்ணைத் தூவ போலி நடவடிக்கைகள்தான் எடுக்கப்படுகிறது.

சமூக உடமை முறையில் சொத்து தனி உடமையாக இல்லாமல் சமூக உடமையாகவுள்ளது. இதனால் இச் சொத்து தனிப்பட்ட ஒரு சிறு பகுதியினருக்கு பயனளிப்பதாக இல்லாமல் முழுச் சமூகத்திற்கும் பயனளிப்பதாக உள்ளது. சொத்து தனிப்பட்ட எந்த ஒரு பகுதியினரதும் கையில் இல்லாததால் எந்த ஒரு பகுதியினரதும் சொத்தின் பலத்தைக்கொண்டு மற்றவர்களுடைய உரிமையை நசுக்க முடியாது. விசேட சலுகைகளை அனுபவிக்க முடியாது. உழைக்காமல் சொத்தின் மூலம் வருமானத்தைப் பெற்று வாழ முடியாது. சமூக உடமைச் சமுதாயத்தில் எல்லோரும் உழைத்து உண்பவர்களாகவே இருப்பர், உழைப்புக்குரிய உண்மையான சன்மானம் அங்கு அளிக்கப்படும். தனி உடமை முறையில்போல் தொழிலாளியின் உழைப்பின் பயனைச் சுரண்ட ஒரு முதலாளிவர்க்கமிராது. மேலதிக வருமானம் உழைப்பாளிகளைக்கொண்ட முழுச் சமூகத்தின் நன்மைக்காகவே பயன்படுத்தப்படும். தனி உடமைமுறையில் போல் முதலாளியின் [சொத்துக்குச் சொந்தக்காரன்] கைக்குள் போகாது இதனால் பெருமளவு பொருளாதாரச் சமத்துவம் இருக்கும். இது சமூக சமத்துவத்தை ஏற்படுத்தும். திறமை அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் ஆட்சியதிகாரத்தை அடைய சமசந்தர்ப்பம் இருக்கும். ஆளும் வர்க்கம் ஆளப்படும் வர்க்கம் என்ற நிலைமை இருக்காது.

எனவே மக்கட் சமுதாயம் உண்மைச் சுதந்திரம் [பொருளாதார சமூக அரசியல்] அடைய வேண்டுமாயின் அது தனி உடமை முறை இருக்கும் வரை சாத்தியமாகாது. தனி உடமை முறை சுரண்டலுக்கும், நசுக்கலுக்கும், அடக்கலுக்கும், ஒடுக்கலுக்கும் வழிவகுக்கும். தனி உடமை முறையிலமைந்த பல்வேறு சமுதாய முறைகளின் வரலாற்று அனுபவத்திலிருந்து தாம் இதை ஆதார பூர்வமாக அறிய முடிகிறது. மக்கட் சமுதாயம் உண்மையான சுதந்திரத்தை ஒரு சமூக உடமைப் பொருளாதாரத்தை அமைப்பதன் மூலம்தான் அடைய முடியும். இதையும் வரலாறு உறுதியாகக் காட்டியுள்ளது. ★

# சீதனமே............

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் முன் நிற்க வேண்டிய இளைஞர்களையும் இளம் பெண்களையும் அவ்வாறு செய்யவொட்டாது தடுத்து நிற்பது தமிழரில் இன்று ஊறிப் போயிருக்கும், அரக்கத்தனமான, பிறரை உறிஞ்சிக் குடித்து தான் கொழுக்க நினைக்கும் ஈவிரக்கமற்ற சீதனம் கோரும் சிந்தனையாகும்''. இச்சிந்தனை தாய்க் குலத்தை வாட்டி வதைக்கின்றது. ஆண்களை சந்தைப் பொருளாக்குகின்றது. தாயக விடுதலையை ஓராயிர ஆண்டுகளுக்கும் அப்பால் தள்ளி வைக்கின்றது.

அண்மையில் இரண்டு வைத்தியர்கள் 2 இலட்சம் சீதனமாகப் பெற்று திருமணம் செய்தார்களாம். இவர்கள் மணம் முடித்தார்களா அல்லது பணம் முடித்தார்களா? (Whether they married or moneyed) கற்றதனாலாய பயன் பணம் கறத்தலெனின் காசற்ற பெண்கள் கரைசேர்வது எவ்வாறோ?

பொறியியலாளர், கணக்காளர், பட்டதாரிகள் அரசாங்க எழுதுவினைஞர் முதலியோர் இன்று ஈவிரக்கமின்றி சீதனம் கோருகின்றனர். இச் சீதனம் கோருதலுக்கு பல இடங்களில் பெண்களும் காரணமாயுள்ளனர். தமக்கு வரப்போகும் வரன் அன்பான கணவனாக இருக்க வேண்டும்

[தொடர்ச்சி 11ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ் ஈழ பொருளாதார சமத்துவத்தின் அத்திவாரம்

— மாதுரி —

தேசீய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளாமல் 'சோசலிசம்' பேசுகின்ற எந்த ஒரு அரசும் ஒரு முதலாளித்துவ அரசின் பிரதிபலிப்பாகவே அமைய முடியும். சிறீ லங்காவின் இன்றைய ஆளும் கட்சியும் முன்னைய ஆளும் கட்சியும் திட்டமிட்டு முதலாளித்துவத்தை வளர்க்கின்ற பிற்போக்குக் கட்சிகளே என்பது சொல்லாமலே புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றாகும். அவர்களுடைய வார்த்தையிலே 'தொனிக்கின்ற சுதந்திரங்களையும் அற்பத்தனமான சலுகைகளையும் நாம் எதிர்பார்ப்பதும், ஏன்? விமர்சனம் செய்வதும் கூட நமது விடுதலையைப் பின் தள்ளுவதாகவே அமையும். அந்த விடயத்தில் விரயமாக்கும் நமது நேரத்தை, நமது பிரதேசங்களை முன்னேற்றுவதற்கான ஆக்கபூர்வமான சிந்தனையிலும், உழைப்பிலும் செலவிடுவதே பயன்பாடுடையதாகும்.

சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம் என்கமூன்று அடிப்படையான அத்திவாரங்களில் எழுப்பப்படுகின்ற சமுதாயமே உண்மையான சோசலிச சமூகமாக மலரமுடியும். இவை மூன்றில் ஏதாவது ஒன்று தவிர்க்கப்பட்டாற்கூட அது ஒரு முதலாளித்துவ சமூகத்தை அடிகோலுகின்ற அமைப்பாகவே முடியும். எனவே அரசியல் விடுதலைக்காகப் போராடுகின்ற நாம் அதே சமயத்தில் பொருளாதார சமத்துவம், சமூக சகோதரத்துவம் என்பவை அடங்கிய பூரண விடுதலைக்காகவும் போராட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பொருளாதார சமத்துவம் என்பது முதலாளி, தொழிலாளி என்ற பேதங்கள் நீக்கப்பட்டு வர்க்கபேதமற்ற, சுரண்டலற்ற பொருளாதாரத்தில் சமத்துவமுடைய ஒரு சமுதாயத்தை ஏற்படுத்துவதாகும். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்க்கவேண்டிய அதே நேரத்தில், நமது தமிழ் மக்களிடையே வளர்ந்து வருகின்ற முதலாளித்துவத்தையும் எதிர்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஒரு தேசிய இனத்தின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதில் அந்த நாட்டின் மூலவளங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ் ஈழத்தின் மூல வளங்களில் முக்கியமான கடல் வளமும், பனை வளமும் நாம் பாதுகாக்க வேண்டிய ஒரு சூழ்நிலையிலேயே இன்று காணப்படுகின்றன. எனவே கடற்றொழிலிலும், பனை வளத்தைப் பயன்படுத்தும் கைத்தொழிலிலும் நாம் கவனமெடுக்க வேண்டும். அத்துடன் நமதுபொருளாதாரத்தேவைகளான விவசாயம், பாவனைப் பொருட்கள் செய்யும் தொழில், போக்குவரத்து - தகவல் தொடர்பு என்பவற்றுடன் மக்கள் சேவையான, அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம், சுகாதாரம் மருத்துவம், வீட்டு வசதி, கல்வி போன்றவற்றையும் விருத்தி செய்ய வேண்டும்,

விவசாய உற்பத்தியை நமது பகுதியில் அதிகரித்தல், ஊக்கப்படுத்தல், பயன்படுத்தப்படாத தரிசு நிலங்களைப் பயன்படுத்தல். வரட்சியான பகுதியிலுள்ள குளங்களை ஆழப்படுத்தல், தானிய உற்பத்தியை ஊக்கப்படுத்தல் இவற்றில் விஞ்ஞான ரீதியான ஆலோசனைகளை நேரடியாக வழங்குதல் என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் கூட்டுப் பண்ணைகள் அமைத்தல் கால்நடை, கோழிவளர்ப்பு, இவற்றின் உணவுப் பொருட்களைக் கைத்தொழில் ரீதியில் இவ்விடங்களிலேயே உற்பத்தி செய்தல் என்பன அவதானிக்கப்பட வேண்டும். இது தவிர எமது பகுதிகளில் காணப்படும் மூலவளங்களைப் பயன்படுத்தி சுயமாகக் கைத்தொழில் செய்ய முன்வருவோருக்கு ஆலோசனையும் பொருளுதவியும் வழங்கவும், நாம் முயற்சி செய்யவேண்டும். பின் தங்கிய பகுதிகளில் கல்விப்பணி, பாலர் பாடசாலை, பெண்களின் சமூக அந்தஸ்து உயர்த்தப்படுதல், சுகாதாரம், மருத்துவம் என்பனவும் கவனிக்கப்பட வேண்டியனவாகும்.

மேலே குறிப்பிட்ட எல்லாமே நமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய அவசியமானவையாகும். இந்த முயற்சியில் நாம் இறங்கினால் நமது தேவைகளுக்கான பொருட்கள் இங்கேயே உற்பத்தி செய்யப்படுவதுடன், நாம் சுதேசப் பொருட்களை ஆதரித்து, ஏகாதிபத்திய சிங்கள உற்பத்திப் பொருட்களைப் பகிஷ்கரிப்பதன்மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்பையும், சிங்கள சிறீ லங்காவில் பொருளாதார முடங்கலையும் ஒரே சமயத்தில் ஏற்படுத்தலாம். தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு முதலாளித்துவ உற்பத்திகளைப் பகிஷ்கரிக்க முடியும் எனினும் நமது சுயதேவைக்குரிய பொருட்களை இங்கேயே உற்பத்தி செய்யும்வரை அந்த முயற்சி சாத்தியமற்றதாகவே அமையும். ஆனாலும் கூடுதலான வரையில் எமது பகுதி உற்பத்திப் பொருட்களை ஆதரித்து நவகாலனித்துவ உற்பத்திப் பொருட்களைப் பகிஷ்கரிப்பது நமது ஆரம்ப முயற்சியில் ஒன்றாக இருக்கும்.

நவகாலனித்துவ உற்பத்திகளை எதிர்ப்பதுடன் மட்டும் நின்று விடாது நமது அடிப்படைப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய முயற்சியும் பொருளாதார சமத்துவத்துக்கு அவசியமானதாகும். எங்கள் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் முயற்சியின்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே விடுதலைப் போராட்ட வீரனாகிடத் துடிக்கும் ஒவ்வொருவனும் சிறிய ஒழுக்க முள்ளவனாக வாழவேண்டும். இதுவரை இல்லாதவர்கள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். விடுதலை வீரனானவன் விடுதலை வேட்கை Morale சீரிய சீலம் (Moral) ஆகிய இரு மாடுகளைப் பூட்டிய வண்டியைச் செலுத்துபவன் இவற்றில் ஒன்று பலமின்றிப்போனாலும் அவனால் விடுதலை நோக்கி வண்டியோட்ட முடியாது புறப்பட்டபின் இவ்விரண்டில் எதை ஒருவன் இழந்தாலும் அவனைச் சுட்டு வீழ்த்திவிட்டு அணித்தலைவன் மற்றய உண்மை வீரர்களுடன் முன்னேறுவான்,

3. பங்களாதேஷில் தேசபிதா முஜிபுர் முடிக்கப்பட்டமைக்கும், வீராங்கனைகள் முடிக்க முடியாமைக்கும் காரணமென்ன? பங்களாதேஷில் நடந்த போராட்டம் வெறும் அரசியற் கைமாற்றத்துடன் நின்று விட்டது. வங்காளியரை பஞ்சாபியர் சுரண்டும் நிலைமாறி வங்காளியரை வங்காளியர் சுரண்டும் நிலமைதான் ஏற்படுத்தப்பட்டது. பொருளாதார சமூக சமநிலையைத் தோற்றுவிய தும் முன்னேற்பாடுகளுடன் முஜிபுரின் தேசிய அவாமிலீக் கட்சியோ, இளைஞரின் மூக்தி பஃனியோ செயற்படவில்லை; இது எமக்கெல்லாம் நல்ல பாடமாக அமையட்டும். சகோதரா வங்காளியரை வங்காளியர் ஆள்வதால் பிரச்சினை திரவில்லை. தமிழரைத் தமிழர் ஆள்வதால் மட்டும் தமிழ் மக்கள் பிரச்சினைகள் தீர்ந்து விடாது. ஆக நாம் போராட வேண்டியது வெறும் அரசியற்கைமாற்றத்திற்காக அல்ல சாதிமதபேதமற்ற சமூகசகோதரத்துவத்திற்காகவும், வர்க்க முரண்பாடற்ற பொருளாதார சமத்துவத்திற்காகவும் நாம் ஒருமனப்பட்டு ஒரே தருணத்தில் போராடவேண்டும். நம் நாடு சோஷலிஸ நாடாக மலரும் போது தனிச்சொத்துரிமை அற்றுப்போகும்போது விடுதலைக்குப் பின்னரும் வங்கத்தில் ஏற்பட்ட சீதனக் கொடுமையும் இங்கு ஏற்பட முடியாது.

அன்புச் சகோதரமே, பங்களாதேஷ் தரும் பாடங்களை மனத்திலிருத்து விடுதலை வேட்கையும் சீரிய சிலமும் கொண்ட விடுதலை வீரனாக, வீராங்கனையாக உன்னை உரு வாக்கு; அரசியல் சுதந்திரமும், பொருளாதார சமத்துவமும், சமூக சகோதரத்துவமும் கொண்ட சோஷலிஸ தமிழ் ஈழத்தையே கட்டி எழுப்பு.

உன் அன்புச் சகோதரன்
வீரமணி

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை விட உலக போலி மதிப்பீடுகள் கொண்டவராக இருத்தல் வேண்டுமென இவர்கள் உள்ளூர விரும்புகிறார்கள்,

தம் சகோதரிகளை வாழ்க்கைப் படுத்தித்தாம் சீதனம் கோருவதாகக் கூறி சில ஆண்கள் சீதனம் கோருதலை நியாயப்படுத்த முனைகிறார்கள். இது தன்னை விற்று தானம் செய்யும் இவர்களின் சகோதர பாசத்தை வரவேற்கத்தக்கதா ?

தமிழ் ஈழ இருபால் இளையோரின் தலையாய பிரச்சனை சீதனப் பிரச்சனையாகும்: இதய பூர்வமாக தமிழ்ஈழ விடுதலைக்காக உழைக்க முன்வருவோரையும் சதா கலக்கத்துக்குள்ளாக்குகின்றது இப்பிரச்சினை; இதற்கு தீர்வு உண்டா ?

சீதனப் பிரச்சனை தொடர்பாக ஆராய்வதற்கு மனிதன் மத்திய குழு 25-12-1978 திங்கள் கிறிஸ்மஸ் மாலை கூடியது நிலப்பிரபித்துவத்தின் எச்ச சொச்சமும் இன்றைய முதலாளித்துவ அமைப்பும் ஏற்படுத்தும் சமூக நோய்களிற்கு தீர்வு காண்டது அவ்வளவு சுலபமானதல்லவே; தமிழ்ஈழம் குடியரசாகும் போது தனிச்சொத்துரிமை இல்லாமற் போக சீதனம் தன்னில் மறைந்து விடும். இந்த நீண்ட கால நிரந்தர தீர்வு ஒருபுறமிருக்க இடைக்கால தீர்வு ஏதுமுண்டா ?

சீதனம் கொடுக்காதோ பெறாதோ திருமணம் செய்ய விரும்பும் ஆண்களையும், பெண்களையும் ஒரு அமைப்பில் ஒன்று சேர்த்து அவர்கள் பிரச்சனைகளிற்கு இவ்வமைப்பு மூலம் தற்காலிக தீர்வுகாண மனிதன் முனைகிறான். சீதனப் பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ள திருமணம் ஆகாத ஆண் பெண் இருபாலாரும் சீதனத்தை ஒழிக்க விரும்பும் திருமணமாகாதோரும் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்க,

மனிதன் சீதன ஒழிப்பு அமைப்பு
அஞ்சல் எண் 81.
யாழ்ப்பாணம்.

எல்லாத் தொடர்புகளும் அந்தரங்கமாக வைத்திருக்கப்படும், மேற் குறிப்பிட்டவர்கள் தங்களுக்கிடையில் திருமணம் செய்வதற்கு மனிதன் தகவல் தளமாக செயற்படுவான் இது சம்பந்தமாக நல்லிதயம் படைத்தவர்களிடமிருந்து கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வரவேற்கிறோம்.

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்திவாரம் கிராமங்களே ஆகும். நமது பகுதியில் உள்ள கிராமங்களைத் தெரிந்து எடுத்து அந்தக் கிராமத்தில் ஒரு மாதத்தில் சில நாட்களாவது செலவு செய்யக்கூடிய இளைஞர்கள் ஒன்று கூடிப் பின்வரும் முயற்சிகளில் ஈடுபடுவோம்.

தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் மனித ஆய்வு நடத்துதல் [கிராம மக்களுடைய தேவைகள் பிரச்சனைகள் உட்பட எல்லாம் ஆராயப்பட்டு அவர்களுக்கென ஒரு செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். அந்த செயற்திட்டம் பின்வரும் முக்கிய ஆக்க பூர்வமான செயல்களை உள்ளடக்கியிருக்கும்.]

★ இக்கிராமங்களிலுள்ள மூலவளங்களைக் கொண்டே அவர்களுக்குக் கைத்தொழில்களைக் கற்றுக் கொடுத்தல். சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வி அளித்தல்.

★ திறமையுள்ள மாணவர்களுக்குப் 'புலமைப் பரிசில் அளித்தல்.

★ கூட்டுப்பண்ணை, தானிய வளர்ப்பு, கால்நடை, கோழி வளர்ப்பு என்பவற்றில் ஊக்கப்படுத்தல்

★ இதர ஏற்ற கைத்தொழில்களைக் கற்றுக் கொடுத்தல்; பெண்களுக்கும், ஆண்களுக்கும் சமூக அறிவை ஏற்படுத்துதல்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கடிதம்

# பாடம் புகட்டும் பங்களாதேஷ்......

அன்புச் சகோதரனே சகோதரியே

'மனிதன்' சார்பில் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்களை உனக்கு உரித்தாக்குகின்றேன். மனிதனில் வெளியாகும் விடயங்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்துக் கடிதமெழுதிய உங்களனைவருக்கும் நன்றிகள். இடமின்மை யால் அவற்றை மனிதனில் பிரசுரிக்க முடியாது போகிறது; எனினும் அவ்வப்போது உன் கருத்துக்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளத் தவறமாட்டாய் என்பதை நானறிவேன்.

மற்ற நாடுகளின் விடுதலைப்போராட்டங்களைப் பற்றி நீயும், நானும் தெரிந்துகொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமோ, சுதந்திரத்தின்பின் அந்நாடுகள் எப்படி வாழ்கின்றன என்றறிதலும் அத்துணை முக்கியம்: இந்தவகையில் பங்களாதேஷின் சுதந்திரத்துக்குப் பின்னர் உள்ள ஒரு முக்கிய பிரச்சினைபற்றி உனக்குத் தெரியத்தந்து அதிலிருந்து சில பாடங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டுமென எண்ணுகிறேன். இதற்கு உதவியாக இக் கடிதத்தைத் தொடர்ந்து படிக்குமுன்னர் இவ்விதழில் உள்ள ''வீராங்கனைகள் விலை கொடுக்கிறார்கள்'' என்ற பகுதியைப் படித்துவிட்டுத் தொடர். பங்களாதேஷ் சுதந்திரப் போரின் இறுதி 9 மாத காலத்தில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான வங்காளிப் பெண்கள் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள்; இக் கைங்கரியத்தைச் செய்தவர்கள் சுதந்திரம் காணத்துடித்த கிழக்குப் பாகிஸ்தானிய மக்களை ஒடுக்கித் தம் ஆளுகைக்குள் வைத்திருக்க முயன்ற மேற்குப் பாக்கிஸ்தானிய இராணுவத்தினர் மற்றது ரஸாக்கர்கள். கிழக்குப் பாக்கிஸ்தானில் வாழ்ந்த சிறுபான்மை பீகாரி முஸ்லிம்களே இந்த ''ரஸாக்கர்கள்'' என அழைக்கப்படுபவர்கள். ரஸாக்கர்கள் கிழக்குப் பாக்கிஸ்தானின் [பங்களாதேஷ்] பிரிவினையை எதிர்த்து மேற்குப் பாக்கிஸ்தானிய இராணுவத்தினருடன் ஒத்துழைத்தார்கள். பங்களாதேஷ் இளைஞர் விடுதலைப் படையான 'முக்தி பஃனி' யைச் சேர்ந்தவர்களைக் காட்டிக் கொடுப்பது முதல் மேற்குப் பாக்கிஸ்தான் இராணுவத்தினருடன் சேர்ந்து வங்காளி முஸ்லிம்களையும், இந்துக்களையும் சூறையாடுதல், தீவைத்தல், கற்பழித்தல்வரை இந்த ரஸாக்கர்கள் ஈடுபட்டார்கள்;

டாக்கா பல்கலைக்கழகத்துள் பாக்கிஸ்தானிய இராணுவத்தினர் புகுந்து மாணவிகளைக் கற்பழித்தபோது அதற்குட்பட விரும்பாது எத்தனையோ மாணவிகள் மாடியிலிருந்து குதித்து மரணத்தைத் தழுவினர். தப்பமுடியாமல் வளைத்துப் பிடித்துக் கற்பழிக்கப்பட்டபின் சுட்டுக் கொல்லப்பட்டனர் இன்னும் பலர் இவ்வாறெல்லாம் தம் உயிரினும் மேலான கற்பைத் தாயக விடுதலைக்காய்த் தத்தம் செய்த தவப்புதல்வியரோ இலட்சக் கணக்கான வங்காளி மாதர் ஆயின், இவர்களைச் சுதந்திரப்போரின் வீராங்கனைகள் என்று வங்கபந்து ஷேக் முஜிபுர் ரஃமான் குறிப்பிட்டது எத்தனை பொருத்தம் விடுதலைக்காய் இவ்வீராங்கனைகள் கொடுத்த விலை எத்துணை மகத்தானது.

விடுதலை கிடைத்தது. ஏழு வருடங்கள் உருண்டோடி விட்ட பின்பும் இவ்வீராங்கனைகளின் இன்றைய நிலை என்ன இவர்களை வீராங்கனைகள் என்றழைத்த முஜிபுர் முடிக்கப்பட்டார். இவர்களை முடிப்பதற்கோ முன்வருவார் இல்லையாம். அப்படி மணமுடிப்பதாயின் அதற்குக் கொழுத்த சீதனம் கேட்கிறார்களாம். ஏன் விடுதலை அணியாகிய முக்தி பஃனியைச் சேர்ந்தவர்களைக் கூட விலைகொடுத்துத் தான் இப்பெண்கள் மணக்க முடிகிறது. அன்று தாய் நாட்டு வாழ்வுக்காய் விலை கொடுத்த வீராங்கனைகள் இன்று தம் வாழ்வுக்காக விலை கொடுக்கிறார்கள்,

இச்சம்பவங்களும் நிலவரங்களும் நமக்கு அநேக பாடங்களைக் கற்பிக்கின்றன.

1, பங்களாதேஷில் அன்று நடந்த அனர்த்தங்கள் நம் நாட்டிலும் நாளை நடந்தே தீரும். நம் நாட்டு விடுதலைப்போரில் உன் உடன் பிறந்த, பிறவாத அக்கா, தங்கை, அம்மா மனைவிக்கும் (ஏன் உனக்கும்) பங்களாதேஷில் நேர்ந்தகதி நிகழவே செய்யும். அரசு ஏவாமலே(?) எம்மக்களில் தாவிப் பாய்ந்திடும் வெறி நாய்கள் இப்போதே உண்டல்லோ? எவ்வாறு போரின்போது திட்டமிட்டே வங்காளி இரத்தத்தைக் கலப்படம் செய்யவும் புதுவம்சமொன்றை உருவாக்கிவிடவும் பாக்கிஸ்தானிய பஞ்சாபி இராணுவத்தினர் கற்பழிப்புக்களில் ஈடுபட்டனரோ, விடுதலைப் போராட்டம் முனைப்பாக எமது நாட்டில் ஏற்படும்போதும் பெருமளவில் இச்சம்பவங்கள் எமக்கும் நடக்குமென்பதை மறந்து விடாதே; 1977 ஆகஸ்ட் கலவரத்திலேயே எங்கள் சகோதரிகள் எத்தனைபேர் இக்காடைத்தனத்திற்கு ஆளாகவில்லையா? தொகையைப் பார்க்காது நடந்த சம்பவங்களின் தாற்பரியத்தை மட்டும் நோக்கும்போது பங்களாதேஷில் நடந்தவற்றிற்குச் சற்றும் குறையாதவகையில் எம் உடன்பிறப்புக்களுக்கு நடந்தவற்றை சன்சோனி விசாரணை கதைகதையாகச் சொல்லுமே;

2; பங்களாதேஷில் விடுதலைப் படையினரான முக்தி பஃனியைச் சேர்ந்தவர்கள் கூட கற்பழிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் நம் கவனத்திற்குரியது, இது ரஸாக்கர்களைச் சார்ந்த பெண்களுக்கு நடந்திருந்தால் கூட முக்தி பஃனிக்குப் பலத்த அவமானமே ஏன் 77 இன ஒடுக்கலில் எத்தனையோ தமிழ் மாதர் கற்பழிக்கப்பட்டபோதிலும் ஒரேயொரு சிங்களமாது முல்லைத்தீவுப் பகுதியில் தமிழ் இனத்தைச் சேர்ந்த வெறியர் சிலரால் கற்பழிக்கப்பட்ட சம்பவம் சன்சோனி விசாரணையில் வெளிவந்து தமிழ் இனத்திற்கே அவமானந்தந்து நிற்கவில்லையா? தமிழீழ விடுதலைப் போரின்பின் 'விடுதலைப் படையினரும் கற்பழித்தார்கள்' என்றொரு செய்தி வருமானால் அது எமது நாட்டிற்கும், நாம் பாடுபட்டு விலைகொடுத்துப் பெறப்போகும் சுதந்திரத்துக்கும் எத்துணை இழுக்கை ஏற்படுத்திவிடும்;

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

இப்பிரசுரம் பண்டத்தரிப்பு பிரதான வீதியிலுள்ள திரு. அ. விமலதாசன் என்பவருக்காக யாழ்ப்பாணம் 102, பிரதான வீதியிலுள்ள சென். பிலோமினா அச்சகத்தில் அச்சிட்டு 13-1-79-ல் வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the G. P. O. Under no Q. B. 8935/78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media